IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No.22/2024

dated : 23.10.2025

D.W.1

Name குருசாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இரண்டாவது பட்டியல் சொத்து அரசால் ஆதிதிராவிட நலத்துறையின்மூலம் என் தந்தை சுப்பிரமணியத்திற்கு வழங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். 3ம் பட்டியல் சொத்துக்கள் என் தந்தைக்கு கிரையம் மூலமாகவும், நன்கொடை மூலமாகவும் கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். மற்ற சொத்துக்கள் பூர்விக சொத்துக்கள் என்றால் சரிதான். பூர்விக சொத்துக்கள் அனைத்தும் என் தாத்தா சுப்பையாவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என் தாத்தாவிற்கு சுப்பிரமணி, கணபதி என்ற இரண்டு மக்கள். என் தந்தை சுப்பிரமணி பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள்தான் பூர்விக சொத்துக்கள் ஆகும். என் தந்தைக்கு 1, 2 வாதிகளும், நானும் வாரிசுகள் என்றால் சரிதான். 1ம் வாதிக்கு 5ம் வாதி மகள் என்றால் சரிதான். 2ம் வாதியின் மக்கள்தான் 3, 4 வாதிகள் என்றால் சரிதான். என் தாயார் பேச்சியம்மாள் கடந்த 7 வருடங்களுக்கு முன்பு இறந்துபோனார். என் தந்தை சுப்பிரமணி உயிருடன் இருந்தபோது நானும், 1, 2 வாதிகளும் ஒன்றாக கூட்டுக் குடும்பமாக வசித்தோம்

என்றால் சரிதான். சுப்பிரமணி இறந்தபின்னரும் நாங்கள் தொடர்ச்சியாக கூட்டுக் குடும்ப சொத்துக்களாகவே அனுபவித்து வந்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் எழுத்துப்பூர்வமாக பாகப்பிரிவினை ஏதும் செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். நாங்கள் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டதாக கூறுவது வழக்கிற்காக கூறும் பொய் என்றால் சரியல்ல. 1, 2 வாதிகள் வேலை நிமித்தம் சென்னையில் வசித்து வருகிறார்கள் என்றால் 1ம் வாதி திருமணமாகி சென்னைக்கு சென்றவுடன் 2ம் வாதியும் அவருடன் சென்னைக்கு சென்றுவிட்டார். 1ம் வாதியின் கணவர் இறந்தபின்னர் அவரின் பாதுகாப்பிற்காக 2ம் வாதி சென்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் மகன் பெயர் மகேஸ்குமார். அவர் கோயம்புத்தூர் காரமடையில் உள்ள கிங்ஸ் இன்ஸ்டியூட் நிறுவனத்தில் பொறியியல் படித்தார். அதன்பின்னர் சென்னையில் வேலை தேடுவதற்காக 1ம் வாதி வீட்டில் 6 மாதம் தங்கியிருந்தார். நான் கூறுவது தவறு என்றும் என் மகனுக்கு வேலை கிடைக்கும் வரை அங்குதான் தங்கியிருந்தார் என்றால் சரியல்ல. என் மகனுக்கு ஓட்டுநர் உரிமம் 2ம் வாதியின் முகவரியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் மகனுக்கு 2 வருடத்திற்கு முன்பு வேலை கிடைத்தது. 2016 முதல் 2023 வரை மகேஸ்குமார் 1ம் வாதியின் வீட்டில் தங்கியிருந்தார் என்றால் சரியல்ல. 1, 2 வாதிகள் ஊருக்கு வரும்போது பொது குடும்ப பூர்விக வீட்டில் தங்கியிருப்பார்கள் என்றால் சரிதான். அது பொதுவான வீடு என்பதால் தங்கியிருப்பார்கள் என்றால் சரிதான். 2ம் பட்டியல் 2 வது இலக்க சொத்து

இன்றுவரை பொது அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. குடியிருப்பு மனை தவிர விவசாய நிலங்களை 1, 2 வாதிகள் வெளியூரில் தங்கியிருப்பதால் அவர்களுக்காக நானே அவற்றில் பொதுவில் விவசாயம் செய்து அதிலிருந்து கிடைக்கும் வருமானத்திலும், செலவிலும் 1, 2 வாதிகளுக்குரிய பங்கை கொடுத்து வந்தேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு மூன்று ஆண்டுகளுக்குரிய பங்கை கொடுக்காமல் இருந்து வந்ததால்தான் எங்களுக்குள் பிரச்சனை என்றால் சரியல்ல. எங்களுக்குள் அவ்வாறு பிரச்சனை இருந்து வந்தபோதிலும் 1ம் வாதி வீட்டில் இருந்தார் என்றும் சொத்துக்கள் மீதுதான் பிரச்சனை என்றும் உறவு முறை சுமூகமாகவே இருந்தது என்றும் சொன்னால் சரிதான். வாதிகள் பாகம் பிரித்து தரும்படி கேட்டார்கள் என்றால் சரிதான். நான் ஏற்கனவே பாகம் கொடுத்துவிட்டதால் முடியாது என்று மறுத்துவிட்டேன். அதனால் அவர்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். எழுத்துபூர்வமான ஆவணம் எழுதிக்கொள்வதாக நான் காவல் நிலையத்தில் ஒத்துக்கொண்டேன் என்றால் சரிதான். அவ்வாறு ஒப்புக் கொண்ட பின்னரும் நான் எழுத்துமூலமான ஆவணம் எழுதிக் கொள்ள முன்வரவில்லை என்றால் சரியல்ல நான் தயாராகவே இருந்தேன். நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். வீண் வம்பை வளர்க்கும் நோக்கத்துடன் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல. அதற்கு வாதிகள் பதில் அனுப்பியிருந்தார்கள் என்றால் சரியல்ல. அந்த அறிவிப்பை வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் பதில் அனுப்பவில்லை

என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது எழுத்துமூலமான ஆவணம் எழுதிக் கொள்ள தயாராக உள்ளேன் என்றால் முன்னதாக பிரித்துக் கொண்டபடி ஆவணம் எழுதிக் கொள்ள தயாராக இருக்கிறேன் நான் கூறுவது தவறு என்றும் இதுவரை எங்களுக்குள் எந்த பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் வழக்கில் கோரியுள்ளபடி அவர்கள் கோரும் பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. வாதிகளை ஏமாற்றும் நோக்கத்தில் வீண் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நாளது தேதிவரை என் தந்தை பெயரில் பட்டா உள்ளது. வாதிகள் எனது அனுமதியில்லாமல் அவர்களது பெயரை பட்டாவில் சேர்த்துள்ளார்கள். 1, 2 வாதிகளுக்குள் எனக்குரிய அதே பங்கு உரிமையுள்ளதால் அவர்கள் பெயர் பட்டாவில் சேர்க்கப்பட்டது என்றும் அது முறையான விசாரணைக்கு பின் சேர்க்கப்பட்டது என்றால் சரியல்ல. வாதி வழக்குரையில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.10.23 17:17:00 +0530